## வகுப்பு - 8 - புவியியல், 7 - கண்டங்களை ஆராய்தல்
## ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் அண்டார்டிகா

1. உலகின் ஏழு கண்டங்களுள் ________ அடிப்படையில் இரண்டாவது பெரிய கண்டமாக ஆப்பிரிக்கா விளங்குகிறது.

(1) நிலப்பரப்பளவு (2) மக்கட் தொகை

(3) வேளாண்மை (4) நிலப்பரப்பளவு மற்றும் மக்கட்தொகை

2. உலகின் ஏழு கண்டங்களுள் நிலப்பரப்பளவு மற்றும் மக்கட் தொகை அடிப்படையில் ________ கண்டம் முதலிடம் பெறுகிறது.

(1) ஆசியா (2) ஆப்பிரிக்கா

(3) ஆஸ்திரேலியா (4) அண்டார்டிகா

3. $37^0$ 21' வட அட்சம் முதல் $34^0$ 51' தென் அட்சம் வரையிலும் $17^0$ 33' மேற்கு தீர்க்கம் முதல் $51^0$ 27' கிழக்கு தீர்க்கம் வரையிலும் பரவி அமைந்துள்ள கண்டம்

(1) ஆசியா (2) ஆப்பிரிக்கா (3) ஆஸ்திரேலியா (4) அண்டார்டிகா

4. ஆப்பிரிக்கா கண்டமானது ________ மில்லியன் சதுர கிலோமீட்டர் பரப்பளவில் அமைந்து காணப்படுகிறது.

(1) 30.36 (2) 7.68 (3) 14 .4) 24.7

5. ஆப்பிரிக்கா கண்டத்தின் அமைவிடம் ________.

(1) $7^0$ வடஅட்சம் முதல் $84^0$ வடஅட்சம் வரையிலும், $53^0$ மேற்கு தீர்க்கம் முதல் $180^0$ மேற்கு தீர்க்கம் வரையிலும்

(2) $10^0$ 04' தென்அட்சம் முதல் $39^0$ 08' தென் அட்சம் வரையிலும், $109^0$ கிழக்கு தீர்க்கம் முதல் $153^0$ 39' கிழக்கு தீர்க்கம் வரையிலும்

(3) $37^0$ 21' வட அட்சம் முதல் $34^0$ 51' தென் அட்சம் வரையிலும், $17^0$ 33' மேற்கு தீர்க்கம் முதல் $51^0$ 27' கிழக்கு தீர்க்கம் வரையிலும்

(4) தென் துருவப் பகுதி

LIVEWORKSHEETS

6. உலகின் மொத்த நிலப்பரப்பில் ______ நிலப்பரப்ப ஆப்பிரிக்கா கண்டத்தில் உள்ளது.

(1) 20.21% (2) 9.3% (3) 16.50% (4) 15%

7. புவிநடுக்கோடு / புவியிடைக்கோடு / பூமத்திய ரேகை என்பது ______ ஆகும்.

(1) $0^0$ அட்சரேகை
(2) $23^0$ 30' வடக்கு அட்சரேகை
(3) $23^0$ 30' தெற்கு அட்ச ரேகை
(4) $66^0$ 30' வடக்கு அட்ச ரேகை

8. $0^0$ அட்சம் முதல் $23^0$ 30' வட அட்சம் வரையிலும் $0^0$ அட்சம் முதல் $23^0$ 30' தென் அட்சம் வரையிலும் அமைந்துள்ள பகுதிகள்

(1) அயன / வெப்ப மண்டல பகுதிகள்
(2) மித வெப்பமண்டல பகுதிகள்
(3) வட துருவ உறைநிலை குளிர் மண்டல பகுதி
(4) தென் துருவ உறைநிலை குளிர் மண்டல பகுதி

9. முதன்மை தீர்க்க ரேகையான ($0^0$ PRIME MERIDIAN) ஆப்பிரிக்க கண்டத்தின் மேற்கு பகுதியில் அமைந்துள்ள ______ அருகில் செல்கிறது.

(1) அல்ஜீரியா நாட்டின் தலைநகரான அல்ஜியர்ஸ்
(2) நைஜர் நாட்டின் தலைநகரான நியாமே
(3) கானா நாட்டின் தலைநகரான அக்ரா
(4) டோகோ நாட்டின் தலைநகரான லோம்

10. சிறந்த கடற்பயண ஆய்வாளர்களான ______ ஆப்பிரிக்க கண்டத்தின் உட் பகுதிகளை முதன்முதலில் ஆராய்ந்தவர்களாவர்.

(1) கிறிஸ்டோபர் கொலம்பஸ் மற்றும் வெஸ்புகி
(2) ஸ்பானியர்கள் மற்றும் போர்த்துகீசியர்கள்
(3) ஹென்றி எம் ஸ்டான்லி மற்றும் கேப்டன் கேம்ஸ்குக்
(4) டேவிட் லிவிங்ஸ்டோன் மற்றும் எச்.எம்.ஸ்டான்லி

LIVEWORKSHEETS

11. ஆப்பிரிக்காவில் மனிதனின் மூதாதையர்கள் _______ ஆண்டுகளுக்கும் மேலாக வாழ்ந்ததாக ஆதாரங்கள் உள்ளதாக தெரிய வருகிறது.

(1) 6 (2) 5 (3) 4 (4) 3

12. புவியில் மனித இனங்கள் வாழ்ந்த தொன்மையான (பழமையான) கண்டம் என்பதால் ஆப்பிரிக்காவானது _______ எனப் புனைப் பெயரிட்டு அழைக்கப்படுகிறது.

(1) இருண்ட கண்டம் (2) எகிப்தின் நன்கொடை

(3) தாய் கண்டம் (4) புவியின் அணிகலன்

13. ஆப்பிரிக்க கண்டத்தில் நிலவும் பல்வகை _______ பல்வேறு மனித இனக்குழுக்களுக்கும் பன்முக கலாச்சாரத்திற்கும் முதன்மை காரணமாக உள்ளன.

(1) இயற்கை அமைப்புகள் (புவியில் சூழல்கள்) (2) அரசியல் பிரிவுகள்

(3) போக்குவரத்துகள் (4) கனிமங்கள்

14. ஆப்பிரிக்க கண்டத்தின் உட்பகுதிகள் குறித்து பெரும்பாலோனோர் அறிந்திருக்கவில்லை என்பதால் _______ என்று அழைக்கப்படுகிறது.

(1) தாய் கண்டம் (2) இருண்ட கண்டம்

(3) புவியின் அணிகலன் (4) எகிப்தின் நன்கொடை

15. 1878 ஆம் ஆண்டு ஆப்பிரிக்க கண்டத்தை இருண்ட கண்டம் என்று முதன்முதலில் அழைத்தவர் _______.

(1) ஹென்றி எம் ஸ்டான்லி (2) டேவிட் லிவிங்ஸ்டோன்

(3) கேப்டன் ஜேம்ஸ்குக் (4) வெஸ்புகி

16. ஆப்பிரிக்கா கண்டமானது அரசியல் பிரிவுகளின் அடிப்படையில் _______ நாடுகளை உள்ளடக்கியது _______.

(1) 64 (2) 54 (3) 53 (4) 63

LIVEWORKSHEETS

17. ஆப்பிரிக்கா கண்டமானது புவியியல் அமைவிட அடிப்படையில் _______ பிரிவுகளாக உள்ளன

(1) 8 (2) 7 (3) 6 (4) 5

18. பொருத்துதல்.

i. கென்யா - 1. காலநிலை

ii. கிழக்கு ஆப்பிரிக்கா - 2. வடிகாலமைப்பு

iii. சவானா - 3. இயற்கை அமைப்பு

iv. நைல் - 4. அமைவிடம்

v. மத்திய தரைக்கடல் - 5. அரசியல்

| | i | ii | iii | iv | v | | i | ii | iii | iv | v |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | 5 | 4 | 3 | 2 | 1 | (2) | 1 | 2 | 3 | 4 | 5 |
| (3) | 3 | 4 | 5 | 1 | 2 | (4) | 2 | 3 | 4 | 5 | 1 |

19. வட மேற்கு ஆப்பிரிக்க நாடுகளான மொராக்கோ, அல்ஜீரியா, லிபியா, மோரிடானியா மற்றும் துனிசியா ஆகிய நாடுகளின் குழு _______ என்று அழைக்கப்படுகிறது.

(1) வட ஆப்பிரிக்கா (2) மத்திய ஆப்பிரிக்கா

(3) கிழக்கு ஆப்பிரிக்கா (4) மேக்ரெப்

20. 'மேக்ரெப்' என்பதற்கு _______ மொழியில் 'மேற்கு' என்று பொருள்.

(1) தமிழ் (2) ஆங்கிலம் (3) அரபிக் (4) ஜுலு

21. பொருந்தாத ஒன்றை வெளியேற்று.

(1) ஆப்பிரிக்கா கண்டம் 54 நாடுகளை உள்ளடக்கியது.

(2) ஆப்பிரிக்க நாடுகள் புவியியல் அமைவிட அடிப்படையில் 5 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

(3) ஆப்பிரிக்காவின் இயற்கை அமைப்பு 10 பெரும் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

LIVEWORKSHEETS

(4) ஆப்பிரிக்க கண்டமானது 6 முக்கிய காலநிலை மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.

22. ஆப்பிரிக்காவின் இயற்கை அமைப்பு _______ பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

(1) 10 (2) 9 (3) 8 (4) 7

23. சகாரா, சாஹேல், சவானா, பெரியபிளவு பள்ளத்தாக்கு மற்றும் ஆப்பிரிக்காவின் பெரிய ஏரிகள், கிழக்கு ஆப்பிரிக்க உயர்நிலங்கள், சுவாலி கடற்கரை, காங்கோ வடிநிலம் / ஜையர் வடிநிலம், தென் ஆப்பிரிக்க பீடபூமி ஆகியன ஆப்பிரிக்கா கண்டத்தின் _______ பிரிவுகளாகும்.

(1) அரசியல் (2) அமைவிடம்

(3) இயற்கை அமைப்பு (4) காலநிலை

24. உலகின் மிகப்பெரிய வெப்பமண்டல பாலைவனம் _______.

(1) சகாரா (2) அட்டகாமா (3) தார் (4) பெரிய விக்டோரியா

25. ஆப்பிரிக்காவின் _______ பகுதியில் உலகப்புகழ்பெற்ற சகாரா பாலைவனம் அமைந்துள்ளது.

(1) வடக்கு (2) கிழக்கு (3) தெற்கு (4) மேற்கு

26. பொருத்துக.

**சகாரா பாலைவனத்தின் எல்லைகள்:**

| | | | | |
|---|---|---|---|---|
| i. | வடக்கு | - | 1. | அட்லாண்டிக் பெருங்கடல் |
| ii. | கிழக்கு | - | 2. | சாஹேல் |
| iii. | தெற்கு | - | 3. | செங்கடல் |
| iv. | மேற்கு | - | 4. | மத்திய தரைக்கடல் |

(1) i - 1 ii - 2 iii - 3 iv - 4 (2) i - 4 ii - 3 iii - 2 iv - 1

(3) i - 3 ii - 4 iii - 1 iv - 2 (4) i - 2 ii - 3 iii - 4 iv - 1

LIVEWORKSHEETS

**வினா எண்கள் 27 முதல் 33 கீழ்காணும் கூற்றுகள் மற்றும் நிலவரைபடங்களை கொண்டு விடையளிக்க:**

**கூற்றுகளை ஆராய்க.**


**கூற்று 1:** ஆப்பிரிக்கா $37^{0}$ 21' வட அட்சம் முதல் $34^{0}$ 51' தென் அட்சம் வரையிலும் $17^{0}$ 33' மேற்கு தீர்க்கம் முதல் $51^{0}$ 27' கிழக்கு தீர்க்கம் வரையிலும் பரவி அமைந்துள்ளது.

**கூற்று 2:** ஆப்பிரிக்காவின் வட பகுதியில் அமைந்துள்ள சகாரா, உலகின் மிகப் பெரிய வெப்ப மண்டல பாலைவனமாகும்.

**கூற்று 3:** சகாரா பாலைவனம், ஆப்பிரிக்காவின் அல்ஜுரியா, சாட், எகிப்து, லிபியா, மாலி, மோரிடானியா, மொராக்கோ, நைஜர், மேற்கு சஹாரா, சூடான் மற்றும் துனிசியா ஆகிய 11 நாடுகளில் பரவியுள்ளது.

**கூற்று 4:** சகாராவின் வடக்கே மத்திய தரைக்கடலும், கிழக்கே செங்கடலும், தெற்கே சாஹேலும், மேற்கே அட்லாண்டிக் பெருங்கடலும் எல்லைகளாக அமைந்துள்ளன.

ஆப்பிரிக்காவின் இயற்கை அமைப்பு







27. (1) கூற்றுகள் 1, 2, 3 மற்றும் 4 தவறு (2) கூற்று 1, 2, 3 மற்றும் 4 சரி
    (3) கூற்று 1, 2, 3 சரி, கூற்று 4 தவறு (4) கூற்று 1, 2, 3 தவறு, கூற்று 4 சரி

28. (1) கூற்று 1, 2, 3, 4 களுக்கிடையே தொடர்பு ஏதும் இல்லை.

LIVEWORKSHEETS

(2) கூற்று 1, 2, 3 களுக்கிடையே தொடர்பு உள்ளது மேலும் கூற்று 4 ற்கு தொடர்பு இல்லை.

(3) கூற்று 1, 2 களுக்கிடையேயும் மற்றும் கூற்று 3, 4 களுக்கிடையேயும் தொடர்பு உள்ளன.

(4) கூற்று 1, 2, 3, 4 களுக்கிடையே தொடர்பு உள்ளது.

29. நிலவரைபடம் - 1 னது எந்தெந்த கூற்றை சரிபார்த்து விவரணம் (Interpretation) செய்ய உதவுகிறது.

(1) கூற்று 1, 2, 4 (2) கூற்று 1, 2, 3, 4 (3) கூற்று 1, 2, 3 (4) கூற்று 3

30. நிலவரைபடம் - 2 னது எந்தெந்த கூற்றை சரிபார்த்து விவரணம் (Interpretation) செய்ய உதவுகிறது.

(1) கூற்று 1, 2, 4
(2) கூற்று 1, 2, 3, 4
(3) கூற்று 2, 3, 4
(4) கூற்று 1, 2, 3

31. நிலவரைபடம் - 1 (ஆப்பிரிக்க இயற்கை அமைப்பு) எந்தெந்த கூற்றிற்கு தனித்துவம் வாய்ந்த நிலவரைபடமாகும்?

(1) கூற்று 2 மற்றும் 4
(2) கூற்று 1 மற்றும் 3
(3) கூற்று 1 மற்றும் 2
(4) கூற்று 3 மற்றும் 4

32. நிலவரைபடம் - 2 (ஆப்பிரிக்க அரசியல் பிரிவுகள்) எந்தெந்த கூற்றிற்கு தனித்துவம் வாய்ந்த நிலவரைபடமாகும்?

(1) கூற்று 2 மற்றும் 4
(2) கூற்று 1 மற்றும் 3
(3) கூற்று 1 மற்றும் 2
(4) கூற்று 3 மற்றும் 4

33. நிலவரைபடங்கள் (ஆப்பிரிக்கா இயற்கை அமைப்பு மற்றும் அரசியல் பிரிவுகள்) 1 மற்றும் 2 ஆகிய இரண்டையும் ஒப்பிட்டு சரிபார்த்து விவரணம் செய்ய வேண்டிய கூற்று.

(1) கூற்று 1 (2) கூற்று 2 (3) கூற்று 3 (4) கூற்று 4

LIVEWORKSHEETS

34. மலைகள், பீடபூமிகள், எர்க்ஸ், பாலைவனச் சோலை, மணல் மற்றும் சரளை மூடிய சமவெளிகள், உப்பு ஏரி, ஆற்றுக் கொப்பரைகள் மற்றும் ஊது பள்ளங்கள் போன்ற நிலத்தோற்றங்களை கொண்ட ஆப்பிரிக்காவின் இயற்கை அமைப்பு பிரிவு எது?

(1) சாஹேல் (2) சவானா (3) சகாரா (4) சுவாலி

35. சகாரா பாலைவனத்தின் மிக உயரமான சிகரம் ________.

(1) கிளிமஞ்சாரோ (2) தபனாநிட் லியானா

(3) மௌண்ட் கௌசி (4) டோப்கல்

LIVEWORKSHEETS